இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

## YESUVAI THINAM PARKIREN

VOL : 26 ISSUE : 08 AUGUST 2026 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# இயேசுவின் பாதத்தில் அமருங்கள்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN


சுவிசேஷ
தீர்க்கதரிசன
ஜெப முகாம்
PRO.VINCENT SELVAKUMAR
PAS.OSBORNE JEBADURAI
EVG.L.VINCENT RAJ
EVG.KALA VINCENT
அக்டோபர்
1,2,3
9:30 AM - 7:00 PM
இடம் :
வானத்தின் வாசல் சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல்.
For Registration : soe.jesuslives.in
தொடர்புக்கு : 94980 00449, 94428 00449, 94428 00447


ஆகஸ்ட்
15
சனிக்கிழமை
மதுரை
எழுப்புதல்
உபவாச
ஜெபம்
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், PRC டிப்போ அருகில், மதுரை.
VINCENTRAJ
&
KALAVINCENT

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். 2 சாமுவேல் 24:14-ல் அவருடைய இரக்கங்கள் மகா பெரியது என்ற வார்த்தையின்படி தேவனுடைய இரக்கங்கள் இன்றைக்கு பெரியவைகளாய் இருப்பதினால் நாம் நிர்மூலமாகாமல் இருக்கிறோம். நாம் வாழும் இந்த கடைசி காலத்தில் இயற்கையின் மாற்றம், கடும் வெப்பம், வெயில் ஒரு பக்கம் தண்ணீரில் மிதக்கும் நாடுகள், பூமி தத்தளிக்கிறது. உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களும் நமக்கு ஒரு முடிவையும், அழிவையும் காட்டுகிறது. இவைகளின் மத்தியிலே ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகம் எங்கும் அறிவிக்கப்படத்தான் நாம் ஊழியம் செய்கிறோம். கடந்த நாட்களில் கன்னியாகுமரி  பள்ளியாடியிலும் கருங்கல்லிலும் நடைபெற்ற கூட்டங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. அதன் பிறகு திண்டுக்கல் மாவட்டத்தில் நம்முடைய சுவிசேஷ  வேன் மூலமாக மைக்கேல் பாளையத்திலும், பட்டிவீரன் பட்டியிலும், ஒட்டன்சத்திரம் பகுதியிலும் ஊழியம் செய்ய தேவன் அனுக்கிரகம் செய்தார். தேவனை அறியாதவர்கள் அநேகர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதைத் தொடர்ந்து செம்பட்டி வானத்தின் வாசலில் நடைபெற்ற உபவாச ஜெபமும், மதுரை எழுப்புதல் உபவாச ஜெபமும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. தொடர்ந்து தேசத்திலே தேவனுக்கு விரோதமாக, சுவிசேஷம் அறிவிக்காதபடி தடை செய்கிற அதிகார வர்க்கங்கள், அவர்களுடைய திட்டங்கள் அழிக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து மாத இதழ் ஊழியத்திற்காக ஜெபிக்க வேண்டும் காரணம் போஸ்டல் சலுகை எல்லாம் நிறுத்தப்பட்டு அதிகமாக ஸ்டாம்பு ஒட்டத்தான் வேண்டும் என்கிறார்கள். அப்படித்தான் ஸ்டாம்பு ஒட்டி அனுப்பிக் கொண்டிருக்கிறோம். நமது யூடியூப் சேனலில் ஒவ்வொரு நாள் இரவும் கர்த்தாவே என்னை கை தூக்கி விடும் என்ற நிகழ்ச்சியும், காலை தோறும்  இயேசுவை தினம் பார்ப்போம். நிகழ்ச்சியும் ஒளிபரப்பாகிறது இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபத்தாலும் காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்குங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



**இயேசுவின் பணியில்**

L. Vincent Raj

(சகோ . L. வின்சென்ட்ராஜ்)

# இயேசுவின் பாதத்தில் அமருங்கள்



(சகோ. டி.வின்சென்ட்ராஜ்)

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தையின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

**"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" எபேசியர் 2:7**

கர்த்தருடைய வேதம் அழகாய் சொல்லுகிறது கிறிஸ்து இயேசுவுக்குள் அவரோடே கூட நம்மை எழுப்பி விட்டார் என்று. நான் ஒரு கூட்டத்திற்கு போயிருந்தேன். அங்கு கடவுளை அறியாத கணவன் மனைவி வந்திருந்தார்கள், அவர்களை குறித்த சாட்சியை கேட்டேன். ஒரு நாள் போதகருடைய கார் வழியிலே நின்று விட்டது. அப்பொழுது இவர் மெக்கானிக் வேலை செய்வதால் இவரிடம் சரி செய்ய சொல்லியிருக்கிறார். இந்த கார் நிறைய டேமேஜ் ஆகிவிட்டது இதை சரி செய்ய நிறைய பணம் செலவாகும் என்று சொன்னார். அப்பொழுது இந்த மெக்கானிக் நீங்கள் என்ன வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று போதகரிடம் கேட்டார். அதற்கு அவர் நான் இயேசுவைப்பற்றி எல்லாருக்கும் அறிவிக்கிறேன் என்றார். அப்பொழுது அந்த மெக்கானிக் என் மனைவி கால் வலியால் நடக்க முடியாமல் இருக்கிறாள் என்றார். அதற்கு அந்த போதகர் வாருங்கள் போய் ஜெபம் பண்ணுவோம் என்று அந்த மெக்கானிக்கை கூப்பிட்டு கொண்டு அவர் வீட்டிற்குப் போனார். ஜெபம் பண்ணின பின்பு அவர் மனைவி எழுந்து உட்கார்ந்து விட்டார்கள். கர்த்தர் அற்புதம் செய்தார். அந்தக் காரை ஃப்ரீயாக சரி பார்த்து ஓட வைத்து மெக்கானிக் அந்த போதகரிடம் கொடுத்தார். கர்த்தர் எவ்வளவு நல்லவர் என்று பாருங்கள். அவரால் முடியாத காரியம் ஒன்றுமில்லை.

இயேசுகிறிஸ்து இந்த பூமியில் மரித்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து பரலோகத்திற்குச் செல்லும் போது அவர் மட்டும் எழுந்து போகவில்லை ஒரு கூட்டத்தையே மேலே கூட்டிக்கொண்டு போனார். ஆயிரம் ஆயிரமான தேவ தூதர்களோடும், கல்லறையில் படுத்திருந்த அநேக பரிசுத்தவான்களோடு மேலே போனார். ஒருநாள் இயேசு பூமிக்கு திரும்ப வரப்போகிறார். நீங்களும் நானும் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால், பரிசுத்தமாயிருந்தால் நம்முடைய உறவுகள் காண நாமும் அவருடன் கூட வானத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம். இயேசு சீக்கிரம் வரப்போகிறார். உங்களை இமைப்பொழுதில் அழைத்துச் செல்லுவார். அவரோடே கூட நம்மை எழுப்பி உன்னதங்களிலே கூட்டிட்டுப் போகிற ஆண்டவர் எங்கு உட்கார வைக்கிறார் என்றால் **யோவான் 14:3-ல் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்** என்று சொல்லப்பட்ட வார்த்தையின்படி அவரோடே கூட உங்களை உட்கார வைப்பார். அவர் இன்றைக்கு உங்களைப் பார்த்து சொல்லுகிறார் உங்களுக்கு

வீடு இருக்கோ இல்லையோ, சொந்த இடம் இருக்கோ இல்லையோ. உங்களுக்கு ஒரு ஸ்தலத்தை அவர் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிறார். அந்த ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு அவர் இருக்கும் இடத்திலே நீங்களும் இருக்கும்படி, அவர் மறுபடியும் வந்து உங்களை அவரிடத்தில் சேர்த்துக் கொள்ளுவார்.

## ஏன் நம்மை தேவன் உட்கார வைக்க வேண்டும்

இந்த காலத்தில் மனிதனுக்கு உட்கார நேரம் இல்லை. ஓடிக்கொண்டே இருக்கிறான். ஒரே அலைச்சல், வேலை நிமித்தம் வெளிநாடு போகிறார்கள், வியாபாரத்தை நினைத்து தொழிலுக்குப் போய் விடுகிறார்கள். அந்த மனிதன் வந்து இராத்திரி 11 மணிக்கு படுத்து காலையில் எழுந்ததும் போய் விடுகிறார் பிள்ளைகள் அப்பாவை பார்க்க முடியவில்லை என்று மனைவி புலம்புகின்ற, இப்படிப்பட்ட உலகத்தில் நாம் வாழ்கிறோம். ஆனால் ஆண்டவர் உங்களை உட்கார வைத்து அழகு பார்க்கிற தேவன், உங்கள் கண்ணீரை துடைக்கிற தேவன், உங்கள் சஞ்சலத்தை நீக்குகிற தேவன், அதற்குத் தான் அவர் வாழ்கிறார், ஜீவிக்கிறார், உயிரோடு இருக்கிறார். யோவான் அவர் மார்பில் சாய்ந்திருந்தான். உயிர்த்தெழுந்த பின்பு அவரைக் கண்டபோது செத்தவனை போல் விழுந்து விட்டான்.1 சாமு 7-ம் அதிகாரத்தில் உடன்படிக்கை பெட்டிக்கு முன்பாக தாகோன் முகங்குப்புற விழுந்தது. நீங்கள் இயேசுவோடு உட்காரும் போது எல்லா மார்க்க பேதங்களும், பிசாசின் கிரியைகளும் உங்களுக்கு முன்பாக குப்புறவிழும், கர்த்தரே தெய்வம் என்று எல்லா முழங்காலும் முடங்கும், நாவுகள் அறிக்கையிடும். அதற்குத்தான் கர்த்தர் உங்களையும் என்னையும் இன்றைக்கு அவரோடுகூட உட்கார வைத்திருக்கிறார்

## தேவையானது ஒன்றே

**அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். லூக்கா 10:39**

ஜெபம் என்பது என்னவென்றால் உங்களுடைய ஐம்புலன்களை அடக்கி தேவ சமூகத்தில் உட்காருவது தான். ஒரு ராஜாவுக்கு முன்பாக எப்படி உட்கார வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும். ஒரு கமாண்டர் கிட்ட எப்படி உட்கார வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும். மரியாள் இயேசுவின் பக்கத்தில் உட்கார்ந்து வசனத்தை கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் மார்த்தாளுக்கோ உட்கார நேரம் இல்லை. பற்பல வேலைகளை செய்தாள். இன்றைக்கு நாம் ஓடிக்கொண்டே இருக்கிறோம், சாப்பிட நேரமில்லை தூங்க நேரமில்லை பரபரப்பான உலகத்தில் வாழ்கிறோம். இப்படிப்பட்ட வேலைகளு நிறைந்த உலகத்தில் மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள். இயேசு மரியாளைப் பாராட்டுகிறார். தேவையானது ஒன்றே நாம் இயேசுவின் பாதத்தில் உட்கார வேண்டும்.

**சங் 139:2 என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர், என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்** என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். நீங்கள் எழுந்தாலும், உட்கார்ந்தாலும் அவர் அறிந்திருக்கிறார். கோலியாத் ஒரு பக்கம், சவுல் ஒரு பக்கம் எப்படி இருக்கும் தாவீதுக்கு, அந்த நிலையிலும் என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய் ஏன் எனக்குள் தியங்குகிறாய் என்று சொல்கிறார். இம்மட்டும் தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுக்காத தேவன், கொடிய மிருகங்களுக்கு விலக்கிக் காத்த தேவன், அவர் பாதத்தில் உட்காருகிற உங்களை கைவிடமாட்டார். எவ்வளவு வேலை இருந்தாலும் எல்லாவற்றையும் ஓரமாக வைத்துவிட்டு மார்த்தாளைப் போல அல்ல மரியாளைப் போல அவர் பாதத்தில் இருங்கள். மீகா தீர்க்கதரிசி சொல்லுகிறார் **மீகா 7:8-ல் என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச்**

**சந்தோஷப்படாதே, நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன், நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்** என்று. இயேசு எங்கெல்லாம் உட்கார்ந்து ஜெபம் பண்ணினாரோ அங்கெல்லாம் ஜனங்கள் அவரைத் தேடி போனார்கள். நீங்கள் உட்கார்ந்திருக்கிற, அவரை நோக்கி கூப்பிடுகிற இடத்துக்கு இயேசு வருவார். நீங்கள் இருளில் இருந்தாலும் கர்த்தர் உங்களுக்கு வெளிச்சமாய் இருப்பார். கண்ணீரின் பாதையில் நீங்கள் கடந்து சென்றாலும், ஏதோ ஒன்றை இழந்திருந்தாலும் எல்லாராலும் வஞ்சிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு தனிமனிதனாக உட்கார்ந்து, தலையிலே அடித்து அழுது கொண்டிருந்தாலும் இன்றைக்கு ஆண்டவர் சொல்லுகிறார் நீ தனி மனிதன் அல்ல நான் உன்னோடேகூட இருக்கிறேன், உன் உட்காருதலை அறிந்திருக்கிறேன். உன் சஞ்சலத்தை நான் அறிந்திருக்கிறேன் இனி அலைய வேண்டாம், புலம்ப வேண்டாம் என்று சொல்லுகிறார். மார்த்தாளும் மரியாளும் சகோதரிகள் தான். ஒரே வீட்டில் இருந்தார்கள் ஆனால் அவர்களுடைய எண்ணங்கள் வேவ்வேறாக இருந்தது. மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள். இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்தாள். மார்த்தாளோ பல வேலைகளை செய்து கொண்டிருந்தாள்.

**உபா 33:3-ல் மெய்யாகவே அவர் ஜனங்களைச் சிநேகிக்கிறார், அவருடைய பரிசுத்தவான்கள் எல்லாரும் உம்முடைய கையில் இருக்கிறார்கள், அவர்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள்** என்று சொல்லப்பட்டபடி நீங்கள் தேவனுடைய பாதத்தில் உட்காரும் போது போதனையடைவீர்கள். உங்கள் வாழ்விற்கான வழிமுறைகளை அவர் கற்றுக் கொடுப்பார். சில நேரங்களில் ஜெபத்தில் நாம் நம்முடைய கஷ்டத்தையே சொல்லிக் கொண்டிருப்போம். இதுக்கு பேர் ஜெபம் அல்ல. என் ஆத்துமாவே நீ தேவனையே நோக்கி அமர்ந்திரு இதுதான் ஜெபம்.

## அலைந்து திரிவதில்லை

**நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள் வரையில் நடந்ததுபோலும், நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன்.** 2 சாமுவேல் 7:10 பரிசுத்தஆவி ஒரு மனுஷனை விட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல் அலைகிறான், சாத்தானுக்கு இளைப்பாற இடமில்லை. ஆனால் நமக்கு உட்கார கர்த்தர் ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணி கொடுத்திருக்கிறார். யோபு 1,2 அதிகாரத்தில் ஒரு நாள் தேவதூதன் வந்து நிற்கும் பொழுது சாத்தானும் அங்கு வந்து நிற்கிறான். ஆண்டவர் சாத்தானை பார்த்து கேட்கிறார் எங்கிருந்து வருகிறாய் என்று, அதற்கு அவன் நான் பூமி முழுவதும் சுற்றி திரிந்து வருகிறேன் என்று சொல்லுகிறான். இப்பொழுது சாத்தானுக்கு நேரமில்லை அலைகிறான் இது ஒரு சாபம். ஆதி 4-ம் அதிகாரத்தில் காயீனுக்கு ஆண்டவர் ஒரு தண்டனை கொடுக்கிறார். என்ன தண்டனை தெரியுமா? **ஆதி 4:14-ல் இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர், நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன், என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான்.** காயீனுக்கு ஆண்டவர் ஒரு சாபத்தை போட்டார்.நிலையற்றவனாய் அலைவாய் என்று. அவனுக்கு நிரந்தரமாக ஒன்றும் கிடையாது. ஆனால் உங்களுக்கும் எனக்கும் நிரந்தரமாக

ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தி இருக்கிறார். இன்றைக்கு நீங்கள் அவர் பாதத்தில் உட்கார வேண்டும். அவர் உன்னதங்களிலே அவரோடு கூட எழுப்பி, உங்களுக்கு ஒரு சிங்காசனத்தை வைத்திருக்கிறார். நான் இருக்கிற இடத்தில் என் பிள்ளைகள் இருக்க வேண்டும், என் நாமத்தினால் அவர்கள் எதைக் கேட்டாலும் கொடுப்பேன். தருவேன் என்று சொல்லி இருக்கிறார். ஆண்டவர் உங்களுடைய வீண் அலைச்சல்களை, போராட்டங்களை மாற்றி உங்களை நிலைநிறுத்தப் போகிறார். உங்கள் போராட்டத்திற்கு முடிவு வரப்போகிறது. உங்கள் யுத்தம் இன்றோடு முடிவடையப் போகிறது. உங்களுடைய ஜெப நேரத்தை திருடுகிறவன் அவன் தான். ஆயிரம் பிரச்சனைகள் வந்தாலும் நீங்கள் தேவ சமுகத்தில் உட்காருங்கள். விடியற்காலையில் ஆயத்தமாகி சீனாய் மலையில் வந்து நில்லு என்று மோசேயிடம் கர்த்தர் சொன்னார் அதேபோல் மோசே நின்றார். இன்றிலிருந்து உங்களுடைய ஜெப நேரத்தை ஆண்டவர் மாற்றப் போகிறார். ஜெப நேரம் இனிமையாகப் போகிறது. தேவன் உங்களை வல்லமையாய் பயன்படுத்த போகிறார்.

**சங் 1:1-ல் துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் என்று சொல்லப்பட்டுள்ளது.**

பேதுரு ரொம்ப நல்ல மனிதன், ஆனால் அவர் உட்கார்ந்த இடம்தான் சரியில்லை. பரிகாசக்காரர் உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்தார். அவர்கள் இயேசுவை அடித்தார்கள், காரி துப்பினார்கள்.ஞான திருஷ்டியில் சொல் உன்னை அடித்தது யார் என்று கேட்கிறார்கள். வேலைக்கார பெண் பேதுருவைப் பார்த்து சொல்லுகிறார் நீ தோட்டத்தில் அந்த மனிதனோடு இருந்தீர் தானே, உன்னை நான் அங்கே பார்த்தேன் என்று. உட்காரக் கூடாத இடத்தில் உட்கார்ந்தால் பேதுரு இயேசுவை எனக்கு தெரியாது என்று மறுதலித்து ஓடிப்போய் விட்டார். நீங்கள் தேவையில்லாத இடத்தில் உட்கார்ந்து பேசுவதை விட்டுவிட்டு தேவ சமூகத்தில் உட்கார்ந்து ஜெபிக்க வேண்டும்.இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து அவருடைய கிருபைகளை, அபிஷேகத்தை, அற்புதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் செய்யப்பட்ட அற்புதங்களை இன்றைக்கும் அவர் உங்களுக்குச் செய்வார். சாத்தானின் சதிகளால், நியாயக் கேட்டின் மக்களால் நெருக்கப்படுகிறீர்களா? பணப் பற்றாக்குறை ஏற்படுகிறதா?. வேலையை விட்டு வரும்போது ஒரு பயம், குடும்ப சூழ்நிலையை சமாளிச்சிருவோமா என்ற கேள்வி வருகிறதா?. நீங்கள் அவர் பாதத்தில் அமர்ந்திருந்தால் தெற்கத்திய வெள்ளங்களை திருப்புவது போல உங்கள் குடும்பத்தினருடைய வாழ்க்கையையும் திருப்பி நல்வழிப்படுத்துவார். உங்களை அலைந்து திரிய விடமாட்டார்.

## உயர்த்தப்படுவீர்கள்

நீங்கள் இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து இருந்தால், அவருடன் சிங்காசனத்தில் உங்களை அவர் உட்கார வைப்பார். தானியேல் மூன்று வேளையும் ஜெபம் பண்ணுவார். அந்தி சந்தி மத்தியான வேளையிலும் ஜெபம் பண்ணுவார்.நீங்கள் இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து இருந்தால், அவருடன் சிங்காசனத்தில் உங்களை அவர் உட்கார வைப்பார். தானியேல் மூன்று வேளையும் ஜெபம் பண்ணுவார். அந்தி சந்தி மத்தியான வேளையிலும் ஜெபம் பண்ணுவார்.**தானியேல் 9:3-ல் நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும், விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கினேன்** என்று சொல்கிறார். சாக்கு உடை அணிந்து சாம்பலில் உட்கார்ந்தார். ஆண்டவர் தானியேலை ஏன் இங்கு உட்கார வைத்தார் தெரியுமா? **1 சாமு 2:8-ல் அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்**, அவர்களைப் பிரபுக்களோடே

உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார் என்ற வார்த்தையை நிறைவேற்றத் தான்.பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள், அவரே அவைகளின் மேல் பூச்சக்கரத்தை வைத்தார். இங்கேயே ஒரு சிங்காசனம், ராஜ மேன்மை எஸ்தருக்கு கிடைத்தது. அவள் தாய் தகப்பன் இல்லாதவள், தேவன் எஸ்தருக்கு ஒரு சிங்காசனத்தை வைத்து, அதில் அவளை உட்கார வைத்து, அவள் வாழ்க்கையை ஒரு வசதியாக வாழ்க்கையாக மாற்றினது உண்மை என்றால் உங்கள் வாழ்க்கையையும் மாற்றுவார், உங்கள் குடும்பத்தை உயர்த்துவார், உங்களுக்கு குழந்தை பாக்கியம் தருவார். உங்களுக்கு ஒரு அற்புதம் செய்வார், உங்கள் வியாதிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பார். அவர் சிறியவனைப் புழுதியில் இருந்து எடுத்து ராஜாக்களோடும், பிரபுக்களோடும் உட்கார வைக்கிறார். இன்றைக்கு நீங்கள் கர்த்தருடைய சமுகத்தில் உட்கார்ந்து இருந்தால் அவர் உங்களை உன்னதங்களில் உட்கார வைப்பார். 40 வருடம் அலைந்து திரிந்த இஸ்ரவேல் மக்களுக்கு கர்த்தர் பாலும் தேனும் பொழிகின்ற நிலையான ஒரு இடத்தை தந்தவர், உங்களுக்கும் நிலையான இடத்தை தருவார். **மாற்கு 5:2-4-ல் அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப்போடுவான், அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது.** சாத்தானுடைய குடியிருப்பு கல்லறை. நம்முடைய குடியிருப்பு பரலோகம். நீதிமானின் கூடாரத்தில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் உண்டாகும் என்று வேதம் சொல்லுகிறது. இந்த பிசாசு பிடித்திருந்த லேகியோனை ஒருவனாலும் அடக்க முடியவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட பிசாசு அவனுக்குள் இருந்தது. அவனை ஆண்டவர் பாதத்தில் உட்கார வைத்தார். **மாற் 5:15-ல் இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள்.** அவன் புத்தி தெளிந்து கர்த்தருடைய பாதத்தில் உட்கார்ந்திருந்தான், எல்லா போராட்டத்திலிருந்தும் விடுதலையைப் பெற்றான். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களில் அவரோடேகூட உட்கார வைப்பாராக.



# கர்த்தரை விசுவாசியுங்கள்



சகோதரி.கலா வின்சென்ட்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். **அப்பொழுது அவர்கள் அவரை (இயேசுவை) நோக்கி தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார். யோவா 6:28,29** இன்றைக்கு நாம் வாழும் இந்த கடைசி நாட்களில் தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வது என்பதும், தேவன் விரும்பும் காரியங்களைச் செய்வதும், அவரை விசுவாசிப்பது என்பதும் ஒரு சவாலான காரியமாகவே இருக்கிறது. சாத்தான் பல வழிகளில் தேவன் மேல் உள்ள நம்முடைய விசுவாசத்தை தகர்க்க, பல சூழ்நிலைகளை நமக்கு எதிராக உருவாக்குகின்றான். ஆனால் வேதத்தில் தேவனுக்கேற்ற கிரியைகளில் மிகமிக முக்கியமானது அவரை விசுவாசிப்பது தான் என்று ஆண்டவர் இயேசு சொல்லிக் கொடுத்தார். இந்த கடைசி நாட்களில் நாம் சந்திக்கின்ற பல்வேறு பிரச்சனைகள் நடுவில், நம் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள நாம் போராடுகிறோம். நாம் மட்டுமல்ல பவுல் அப்போஸ்தலன் கூட சொல்லுகிறார் நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் என்கிறார். **எபே 6:16-ல் பொல்லாங்கான் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாக எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள் என்று ஆலோசனை சொல்லுகிறார்.** யுத்த ஆயுதங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்னும் கேடகம் அதை வைத்து நாம் எதிரியின் தாக்குதல்களை தடுக்க முடியும் என்று வேதம் நமக்கு சொல்கிறது. இந்த கேடகம் இல்லாவிட்டால் அநேகப் பாதிப்புகள் நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் உள்ளே வந்துவிடும். எனவே இந்த விசுவாசம் நமக்கு மிகவும் இன்றியமையாததாய் இருக்கிறது. விசுவாசம் எப்படி நமக்குள் வருகிறது, அதை நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

## விசுவாசம் கேள்வியினால் வரும்

**விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் ரோமர் 10:17** விசுவாசம் என்பது ஒரு மனிதனுக்குள் எழும்பும் கேள்வியினால் வருகிறது என்றும், அந்த கேள்வியும் கூட தேவனுடைய வசனத்தினால், வார்த்தையினால் தான் வருகிறது என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம். இதற்கு ஒரு சிறந்த உதாரணம் தான் யோவான் 4-ஆம் அதிகாரத்தில் உள்ள சம்பவம். **யோவான் 4:8-11-ல் அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி:**

**தாகத்துக்குத் தா என்றார். யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள். இயேசு அவளுக்குப்பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.** அதற்கு அந்த ஸ்திரீ, ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும் என்றாள். சமாரியா பெண்ணிடத்தில் இயேசு பேசுகிறார். அவர் அவளிடம் ஜீவதண்ணீரைக் குறித்து பேசும் போது அவளுக்குள் பல கேள்விகள் எழும்புகிறது அது அத்தனைக்கும் அவர் பதில் சொன்ன போது அவளுக்குள் விசுவாசம் வருகிறது. அவள் தேவனை விசுவாசித்து தன்னுடைய எல்லா பாவமான, பழைய வாழ்க்கையை விட்டு விட்டு தேவனுக்கேற்ற கிரியைகளைச் செய்து அவருக்கு பிரியமாக வாழ ஆரம்பிக்கிறாள். எபி 12:1-ல் **விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது** என்ற வார்த்தையின்படி விசுவாசத்தை அவர்தான் நமக்குள் துவக்குகிறவர். அதன்படி யோவான் 4:15-ல் **அந்த ஸ்திரீ அவரை நோக்கி, ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே தண்ணீர் மொண்டு கொள்ள வராமலுமிருக்கும்படி, அந்தத் தண்ணீரை எனக்கு தர வேண்டும் என்றாள்.** இயேசு பரிசுத்த ஆவியானவரை அந்த பெண்ணுக்கு அறிமுகப்படுத்தினார். அவள் ஒரு கிராமத்துக்கே சுவிசேஷகியாக மாற்றினாள். அதற்கு முன்பு அவள் வாழ்க்கை பிரயோஜனமற்றதாக இருந்தது. திருப்தியில்லாத மீண்டும் மீண்டும் தாகமெடுக்கிற வாழ்க்கையில் சென்று கொண்டிருந்தாள். ஆனால் இயேசு அவளை சந்தித்த போது அவள் வாழ்க்கையை அற்புதமாய், அநேகருக்கு ஆசீர்வாதமாய் மாற்றினார். 1 கொரி 12:9-ல் **வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்** என்று சொல்லப்பட்டுள்ள இந்த வார்த்தையின்படி ஆவியினாலே விசுவாசம் வரமாக நமக்கு கொடுக்கப்படுகிறது. இந்த செய்தியை வாசிக்கின்ற உங்கள் வாழ்விலும் விசுவாசத்தைத் துவக்கி நன்மைகளை அவர் செய்வார். அதற்கு விசுவாசத்தை நமக்குள் துவக்குகின்ற வேத வசனங்களை நாம் அதிகமாய் வாசித்துப் புதுபெலனைப் பெற்றுக் கொள்வோம். பரிசுத்த ஆவியானவராலே நமக்குள் இந்த விசுவாச வரத்தை தேவன் தருகிறார்.



## விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவார்

**அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி, எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும் என்றார்கள். லூக் 17:5** முதலில் வேத வசனத்தினாலும்,ஆவியானவராலும் நமக்கு விசுவாசம் அனல் மூட்டப்படுகிறது என்று பார்த்தோம். சீஷர்கள் ஆண்டவரிடம் வந்து எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண

வேண்டும் என்று கேட்டார்கள். **என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன். யோவான் 14:14-ல்** எழுதியிருக்கிறபடி கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான் என்று ஆண்டவர் சொல்கிறார். பேதுரு வாழ்க்கையில் இயேசு அற்புதம் செய்தார். இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் கிடைக்காமல், வெறும் வலைகளை அசைக் கொண்டிருந்த அவனுக்கு தேவ வார்த்தையால் பெலன் கிடைத்தது. ஆழத்தில் தள்ளிக் கொண்டுபோய் வலையை வீசு என்று இயேசு சொன்னதும், அவருடைய வார்த்தையை நம்பி மீண்டும் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றான். அவன் தன்னுடைய சூழ்நிலையைப் பார்க்காமல் தேவ வார்த்தையின் மீது நம்பிக்கை வைத்து வலையை வீசி வலை கிழியத்தக்க திரளான மீன்களை அள்ளிக் கொண்டு வந்தான். அவனுக்குள் விசுவாசம் துவக்கப்பட்டது. ஆனால் அதில் திருப்தியடையாமல், ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும் என்று கேட்டார்கள். **அதற்குக் கர்த்தர், கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி, நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும் என்றார். லூக் 17:6** கடுகைப் போன்ற சின்ன விசுவாசம் இருந்தால் போதும், சிலர் இந்த கடுகு மேடு, பள்ளம் இல்லாத ஏற்றம், இரக்கம் இல்லாத பூரண வடிவம் கொண்டது. இதைப் போல நம்முடைய விசுவாசம் நமக்கு நன்மைகளை கொண்டு வரும் என்கிறார்கள். நம் விசுவாசம் நாம் பெற்ற அளவிலிருந்து ஒவ்வொரு நாளும் முன்னேறி வளர்ந்து கொண்டே, விருத்தியாகிக் கொண்டே போக ஜெபிக்க வேண்டும்.

> **இயேசுவிடம் நீங்கள் ஜெபிக்கிற ஜெபம் இயேசு உங்களுக்காக ஜெபிக்க ஜெபம், உங்களுக்கு எதிராக சாத்தான் கொண்டு வரும் தோல்விகளை முறித்துப்போடும் நீங்கள் ஜெயம் பெறுவீர்கள்.**

## விசுவாசம் ஒழிந்து போகக்கூடாது

**பின்னும் கர்த்தர், சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன், நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். லூக் 22:31,32** பேதுரு வாழ்வில் பயங்கரமான உபத்திரவம் வரப்போகிற போது இயேசு பேதுருவைப் பார்த்து சொன்னார் நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடி உனக்காக வேண்டிக் கொண்டேன் என்கிறார். பேதுரு தன் விசுவாசம் ஒழிந்து போகும் அளவு சோதனைகளை சந்தித்தான். அவன் விசுவாசத்தை சாத்தான் சுளகில் புடைத்தான். ஆனால் இயேசு அவனுக்காக ஜெபித்த ஜெபம்,

அவன் ஆண்டவரிடம் என் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும் என்று ஜெபித்த ஜெபம் சாத்தானை தோற்கடித்தது. மேல் வீட்டு அறையில் ஏறி காத்திருந்து ஜெபித்து பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்து பேசின போது 3000 பேர். 5000 பேர் என்று இரட்சிப்பைப் பெற்றார்கள். அவன் நடந்த போது நிழல் பட்டு அநேகர் சுகமடைந்தார்கள். தளர்ந்துவிட்டீர்களா? இயேசுவிடம் நீங்கள் ஜெபிக்கிற ஜெபம் இயேசு உங்களுக்காக ஜெபிக்க ஜெபம். உங்களுக்கு எதிராக சாத்தான் கொண்டு வரும் தோல்விகளை முறித்துப்போடும் நீங்கள் ஜெயம் பெறுவீர்கள். **முன்னே நம்மைத் துன்பப்படுத்தினவனே, தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்பதைமாத்திரம் அவர்கள் கேள்விப்பட்டிருந்து, என்னைப்பற்றி தேவனை மகிமைப்படுத்தினார்கள். கலா 1:23,24** பவுல் தன் வாழ்க்கையின் அனுபவத்தை சொல்கிறார். முன்னே துன்பப்படுத்தினவனே, தான் அழிக்க தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கிறான் என்று என்னைக் குறித்து கேள்விப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்கிறார். உங்கள் வாழ்விலும் நீங்கள் தேவன் மேல் வைத்த விசுவாசம் ஒழியாதபடி காத்துக் கொள்ள தேவன் உங்களுக்கு கிருபை தருவாராக

## விசுவாசத்தை முடிக்கிறவர்

**ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; எபி 12:1**

ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிறைந்து பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தான். அதினிமித்தம் எதிரிகள் எழும்பினார்கள். அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள். அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான். அப் 7 58-60. ஸ்தேவான் தன் ஓட்டத்தை ஓடி முடிக்கையிலும்.விசுவாசத்தோடு முடிக்க அவனுக்கு தேவன் கிருபை செய்தார். அந்த தேவன் இன்றைக்கு எனக்கும் உங்களுக்கும் அவருக்குப் பிரியமாக வாழ, அவருக்கேற்ற கிரியைகளைச் செய்ய நமக்குள் விசுவாசத்தை துவக்கி அதை வர்த்திக்கச் செய்வார். எந்த சூழ்நிலையிலும் அவர் மேலுள்ள உங்கள் விசுவாசம் ஒழிந்து போகாதபடி காத்து, விசுவாச ஓட்டத்தை ஜெயமாய் முடிக்க அநுக்கிரகம் செய்வாராக

ஜெப உதவிக்கு
94428 00449
94428 00447
94980 00449



# மைக்கேல்பாளையம், பட்டிவீரன்பட்டி, ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்ற நற்செய்தி கூட்டங்கள்







இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் மூலம் கடந்த மாதம் 4–ஆம் தேதி சனிக்கிழமை மைக்கேல்பாளையத்திலும். 5–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பட்டிவீரன்பட்டியிலும் நற்செய்தி கூட்டங்களை நடத்த தேவன் கிருபை செய்தார். தேவன் நமக்கு கொடுத்ததான சுவிசேஷ வாகனத்தில் சென்று மக்களுக்கு சுவிசேஷத்தை அறிக்க முடிந்தது. அநேக புதிய மக்கள், இயேசுவை அறியாதவர்கள் இந்த நற்செய்தி கூட்டங்களில் கலந்து கொண்டு முதன் முறையாக இயேசுவை குறித்து கேள்விப்படவும், அவரை விசுவாசித்து ஏற்றுக் கொள்ள தேவன் அநுக்கிரகம் செய்தார். அதைத் தொடர்ந்து அவர்கள் நமது வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் நடைபெற்ற ஜெபக்கூட்டத்திலும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றார்கள். ஒட்டன்சத்திரம் தாலுகாவில் உள்ள அனைத்து போதகர்களும், ஊழியர்களும் இணைந்து ஜுலை 11,12 ஆகிய தேதிகளில் ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடத்திய நற்செய்தி கூட்டத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். போதகர்கள், தேவஊழியர்கள் திரளான மக்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையையும், வல்லமையையும் பெற்றுச் சென்றார்கள். நம் சகோதரி அவர்கள் பாடல்களை பாடும்போதும், ஆராதனையை நடத்தும் போதும் மக்கள் தேவபிரசன்னத்தில் களிகூர்ந்தார்கள். நம் சகோதரர் அவர்கள் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தபோது அநேகர் தேவனால் தொடப்பட்டு விடுதலை அடைந்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்த போதகர்கள், ஊழியர்களுக்கு இயேசு வாழ்கிறார் ஊழியகுடும்பத்தின் சார்பாக உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி சொல்லுகிறோம்























# ஆசீர்வாத உபவாச ஜெபம்

ஆசீர்வாத உபவாச ஜெபம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நமது வானத்தின் வாசல் சுவிசேஷ மையத்தில் வைத்து நடைபெறுகின்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகின்றார். கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தில் திரளான மக்கள் புதிதாக வந்து கலந்து கொள்ள தேவன் அநுக்கிரகம் செய்தார். நம் சகோதரி அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வாயிலாக மக்களை தேவபிரசன்னத்தில் நடத்தினார்கள், அநேகர் ஆவியில் களிகூர்ந்தார்கள். நம் சகோதரர் அவர்கள் தேவவார்த்தையை பிரசங்கித்த போது மக்கள் விடுதலையைப் பெற்றார்கள், தேவனுக்காக தங்களை அர்ப்பணித்தார்கள். ஜெபத்திற்கு வந்திருந்த ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய ஆகாரத்தோடு சரீரப்பிரகாரமான ஆகாரம் வழங்க தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக



# எழுப்புதல்
## உபவாச ஜெபம்

மதுரை எழுப்புதல் உபவாச ஜெபம் நம் சகோதரர் வின்சென்ட்ராஜ் அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த தரிசனம், மதுரை மக்களைக் குறித்த பாரம் தான் இந்த மதுரை எழுப்புதல் உபவாச ஜெபம். கர்த்தர் நல்லவர் என்பதை என்பதை ருசித்துப் பாருங்கள், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்ற வார்த்தையின்படி கடந்த நான்கு ஆண்டுகளாக மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். இயேசு எவ்வளவு நல்லவர் என்பதை அநேக மக்கள் ருசித்துப்பார்த்தார்கள். அவர்மேல் நம்பிக்கை வைத்து அநேக மக்கள் அற்புதங்களை, அதிசயங்களைப் பெற்று மகிழ்ந்தார்கள். மேலும் 5- வது ஆண்டிற்குள் இந்த ஊழியத்தை நடத்தி, அநேகரை கூட்டிச் சேர்த்து, சாட்சிகளாகவும், சீஷர்களாகவும் மாற்றின தேவாதி தேவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து கோடான கோடி நன்றி சொல்லுகிறோம்.

# பரம வைத்தியர் செய்த நன்மைகள் சில



சாட்சி பகுதி

**சகோதரி. ஷீலா – மதுரை**

நான் கடந்த சில மாதங்களாகவே முழங்கால் வலியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். வலி தாங்க முடியாது, கொஞ்ச தூரம் கூட நடக்கவும், படிக்கட்டு ஏறவும் மிகவும் சிரமப்பட்டேன். இந்த நிலையில் நான் மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தைக் குறித்து கேள்விப்பட்டு ஜெபத்தில் வந்து கலந்து கொண்டேன். பாடல் ஆராதனை வேளையில் தேவனிடத்தில் என் முழங்கால் வலிக்காக கண்ணீரோடு ஜெபித்தேன். ஜெபம் முடிந்த பிறகு சகோதரி அவர்களிடம் ஜெபித்து விட்டு, வீட்டிற்குச் சென்றேன் அன்றிலிருந்து இன்று வரை முழங்கால் வலியே இல்லை. எனக்கு அற்புதம் செய்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரி. கமலா - திண்டுக்கல்**

என் தம்பி கடந்த ஆண்டு மே மாதம் வேலையில் இருந்து பணி ஓய்வு பெற்றார். நன்றாக இருந்தவர் ஜூன் மாதத்தில் மிகவும் வியாதிப்பட்டார். எல்லா பரிசோதனைகளையும் பார்த்து விட்டு முடிவில் மருத்துவர்கள் கல்லீரல் மோசமான நிலையில் உள்ளது இன்னும் மூன்று மாதங்கள் தான் உயிரோடு இருப்பார் என்று சொல்லி விட்டு, மேலும் சென்னையில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல சொன்னார்கள். அப்பொழுது நான் வானத்தின் வாசலில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு என் தம்பிக்காக கண்ணீரோடு ஜெபித்தேன், ஆராதனை வேளையில் சகோதரி அவர்கள் புதிய ஜீவன் உண்டாகிறது என்ற வார்த்தையை திரும்ப திரும்ப சொன்னார்கள். அந்த வார்த்தையை நான் விசுவாசித்தேன். ஜெபத்தின் முடிவில் சகோதரரிடமும், சகோதரியிடமும் என் தம்பிக்காக ஜெபித்துவிட்டுச் சென்றேன். அவர்கள் சென்னை சென்ற போது அங்குள்ள மருத்துவர்களும் மாற்று அறுவை சிகிச்சை செய்து வேறு கல்லீரல் பொருத்த வேண்டும், இல்லாவிட்டால் இறந்து விடுவார் என்று சொன்னார்கள். கல்லீரல் தேவைக்காக பதிவு செய்து வைத்தாலும் அது கிடைப்பதற்கு ஒரு வருடத்திற்கு மேலாகும் என்று சொன்னார்கள். இந்த நிலையில் தம்பி மருமகன் தனது கல்லீரலை தானம் கொடுத்தார். உடனே அறுவை சிகிச்சை செய்து தம்பிக்கு அந்த கல்லீரலை பொருத்தினார்கள். தேவன் அற்புதம் செய்தார். எந்த ஒரு ஒவ்வாமையும், தொற்றும் இல்லாமல் அந்த கல்லீரல் நன்றாக வேலை செய்யவும், நல்ல சுகம் கிடைக்க செய்தார், இன்று வரை சுகத்தோடும் பெலத்தோடும் வாழவைத்த தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரி. பிரியா – ஒட்டன்சத்திரம்**

எனக்கு திருமணமாகி நான்கு வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்தது. அநேக நிந்தைகளையும் அவமானங்களையும் சந்தித்து மிகுந்த மனவேதனையில் இருந்தேன். எனக்கு கர்ப்பபையில் நீர்கட்டி பிரச்சனையும் இருந்தது. இந்த நிலையில் நான் வானத்தின் வாசலில் நடைபெற்ற உபவாச ஜெபத்திற்கு வந்து கண்ணீரோடு ஜெபித்துவிட்டுச் சென்றேன். தேவன் ஜெபத்திற்கு பதில் தந்து மறுமாதத்திலேயே நீர்கட்டி பிரச்சனையிலிருந்து விடுதலை தந்தார். அதற்கு அடுத்த மாதத்தில் கர்ப்பமாகச் செய்து ஒரு ஆண்மகனைப் பெற்றெடுக்க கிருபை செய்தார். என்மேல் இருந்த நிந்தையை நீக்கி என்னை மகிழச் செய்து, சாட்சியாக வாழவைத்த தேவனுக்கு எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு

## இணைந்து

# சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன்.
தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார்.

அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும் விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (கொரிந்தியா 3:7) இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் பாடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1.BANK TRANSFER

**Union Bank of India**

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI, MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

**AXIS BANK**

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L. VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0000109 |

## 2.இணையதளம் (WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3.காசோலை (CHEQUE)

JESUS LIVES TRUST (OR)
L.VINCENT RAJ

## 4. (GOOGLE PAYE)

+91 944 3009 333

## 5. மணியார்டர் (E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி
பரவை, மதுரை - 625 402.

## 6. Whatsapp

9442800449 என்ற எண்ணிற்கு DONATE என்று டைப் செய்து அனுப்பி WHATSAPP மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை செலுத்தலாம்.

> நமது இயேசு வாழ்கிறார்
> ஊழியத்திற்கான காணிக்கைகளை
> வங்கி கணக்கு மூலமாகவோ,
> இணையதளம் மூலமாகவோ,
> அல்லது GOOGLE PAY மூலமாகவோ
> அனுப்பலாம்.
> காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்து
> விபரத்தை 944 2800 447 என்கிற
> இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ,
> அல்லது இந்த எண்ணிற்கு
> WHATSAPP மூலமாகவோ,
> accounts@jesuslives.in மூலமாகவோ
> எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# டிஜிட்டல் ரூபாய் என்பது யுபிஐ மற்றும் கிரிப்டோவிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?



டிஜிட்டல் ரூபாய் என்பது யுபிஐ மற்றும் கிரிப்டோவிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
டிஜிட்டல் கட்டண முறையை விரிவுபடுத்தவதையும், வாடிக்கையாளர்களுக்குப் பணப் பரிவர்த்தனைகளை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி ஆஃப்லைன் டிஜிட்டல் ரூபாயை (e₹) அறிமுகப்படுத்தியது. ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, டிஜிட்டல் ரூபாய் அல்லது e₹ என்பது இந்தியாவின் மத்திய வங்கி டிஜிட்டல் கரன்சி ஆகும் (சிபிடிசி).

## டிஜிட்டல் ரூபாய் என்றால் என்ன?

டிஜிட்டல் ரூபாய் அல்லது e₹ என்பது இந்தியாவின் காகிதப் பணத்தின் டிஜிட்டல் வடிவமாகும். இது இந்திய ரிசர்வ் வங்கியால் டிஜிட்டல் வடிவில் வெளியிடப்படுகிறது. e₹ முற்றிலும் ரொக்கப் பணத்தைப் போலவே செயல்படுகிறது, அதன் மதிப்பும் அதேதான். இதற்கு ரிசர்வ் வங்கியின் உத்தரவாதம் உண்டு. நீங்கள் இதை உங்கள் போனில் உள்ள டிஜிட்டல் வாலட்டில் வைத்துக்கொள்ளலாம். சாதாரண ரூபாய் நோட்டுகளைப் பயன்படுத்துவது போலவே, பணம் அனுப்பவும், பெறவும் மற்றும் கட்டணம் செலுத்தவும் இதைப் பயன்படுத்தலாம்.

## e₹- இதை எவ்வாறு பயன்படுத்த முடியும்?

வங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் வழங்கும் டிஜிட்டல் வாலட்கள் மூலம் நீங்கள் e₹-ஐ சேமித்து பயன்படுத்தலாம். இந்த வாலட்கள் நேரடியாக ஒரு நபருக்கோ அல்லது வியாபாரிக்கோ பணம் செலுத்த உதவுகின்றன. இதனை தொடங்குவதற்கு, பிளே ஸ்டோர் அல்லது ஆப் ஸ்டோரிலிருந்து e₹ வாலட் செயலியைப் பதிவிறக்கம் செய்து, அதில் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும். கூடுதல் தகவலுக்கு உங்கள் வங்கி அல்லது வாலட் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளலாம். கடைக்காரரிடம் உள்ள சிபிடிசி கியூஆர் குறியீடு அல்லது கடையில் உள்ள யுபிஐ கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து பணம் செலுத்தலாம்.

## பயன்படுத்த சேமிப்புக் கணக்கு அவசியமா?

e₹-ஐப் பயன்படுத்த சேமிப்புக் கணக்கு அவசியமா என்பது மற்றொரு கேள்வியாகும். தற்போது, e₹ வாலட் தொடங்குவது பயனரின் சேமிப்புக் கணக்குடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் பதிவு செய்யும் முறை எளிதாகிறது மற்றும் தனியாக கேஒய்சி (KYC) செய்ய வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், கருத்துகள் மற்றும் பயன்பாட்டு அனுபவங்களின் அடிப்படையில் புதிய மாடல்களை ஆராய்ந்து வருவதாக ஆர்பிஐ தெரிவித்துள்ளது. டிஜிட்டல் ரூபாய் தற்போது முன்னோடித் திட்ட நிலையில் உள்ளதால், தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வங்கி சாரா நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள், வணிகர்கள் மட்டுமே அதைப் பயன்படுத்த முடியும்.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Tesuval Thinam Parkiran 54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: SHARON PRINT SYSTEM, NO. 51/7,AHIMSAPURAM
FIRST STREET, EXTENSION, NEAR SARASWATHI THEATER,
SELLUR, MADURAI - 625002



அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்கள் நடத்தும்
76 வது திருப்பத்தூர்
பரிசுத்த
உபவாச முகாம்
செப்டம்பர்
3,4 வியாழன் வெள்ளி
காலை 5.00 மணிமுதல்
இரவு 9.00 மணிவரை
2026
5 சனிக்கிழமை
காலை 5.00 மணிமுதல்
மதியம் 1.00 மணிவரை
பதிவு கட்டணம் ₹200
SCAN HERE
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
சகோ. சாம் ஜெபத்துரை நினைவு மண்டபம்
9884916777, 9003087777, 9884908777
தொடர்புக்கு : 94980 00449, 94428 00449, 94428 00447




Jesus Lives MINISTRIES
இயேசுவின்
பாதத்தில்
உபவாச ஜெபம்
ஆகஸ்ட்
07
(வெள்ளி)
9.30AM - 2:30PM
இடம்:
வானத்தின் வாசல்
சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல்
தேவ செய்தி
VINCENTRAJ & KALAVNCENT

RNI NO .TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023




To

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Paravai
Madurai-625402
South India.